Registered as a Newspaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 25 (09-01-1994) ஞாயிற்றுக்கிழமை ஓசை 325

## மாணவர் இலவச பாடநூல் இம்மாத இறுதியில் வரும்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான இவ்வருடத்திற்குரிய இலவசப் பாட நூல்கள் இம்மாத இறுதிப்பகுதியில் யாழ்.கல்வித் திணைக்களம் வந்து சேருமென தெரியவருகின்றது. இவ் இலவசப் பாட நூல்களை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டுவந்து தருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்முன் வந்துள்ளதாக யாழ்.தெற்குவலயக் கல்விப்பணிப்பாளர் நமதுநிருபரிற்கு தெரிவித்தார். எனவே இவ்இலவசப் பாடநூல்களை கொழும்பில் இருந்து அனுப்புவதற்கான முன் நடவடிக்கைகளை மேற்கொள்ள அண்மையில் யாழ்.கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் கொழும்பிற்குச்சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

### கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்

# வேட்புமனு தாக்கல் செய்ய மறுத்த 10 தமிழர்கள் ராணுவத்தால் கைது

(திருமலை)

**கிழக்கில் அரசு நடத்த திட்டமிட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்காக திருக்கோணமலை மாவட்டம் வெருகல் பகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்ய மறுத்த பத்துப்பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இத்தேர்தலுக்காக வேட்பு மனுவை தாக்கல் செய்யும்படி இந்த பத்துப்பேரையும் இராணுவத்தினா வற்புறுத்தினர். எனினும் இவர்கள் எவரும் வேட்புமனுவை தாக்கல் செய்ய முன்வரவில்லை. இதையடுத்து இவர்களை இராணுவத்தினர் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை துறைமுகத்துவார முன்னாள் கிராமோதயத் தலைவர் சின்னத்தம்பி சித்திரவேல், இலங்கை துறைமுகத்துவார தற்போதைய கிராமோதயத் தலைவர் செல்லப்பா வீரக்குட்டி' பூமரத்தடிச்சேனை தற்போதைய கிராமோதயத் தலைவர் தம்பிப்பிள்ளை ஏகானந்த மூர்த்தி, வெருகல் பிரதேச இந்து இளைஞர் பேரவை இணைப்பாளர் வைரமுத்து நாகேந்திரன், கறுக்காமுனை கிராமோதய தலைவர் கதிர்காமன் இராமப்பிள்ளை, பூநகர் முன்னாள் கிராமோதயத் தலைவர் வீரக்குட்டி அருள்நேசராசா, பூநகர் தற்போதைய கிராமோதயத் தலைவர் அருணாசலம் செல்வராசா, ஆலய பரிபாலனசபைத்தலைவர்களான விஸ்வலிங்கம் ஜீவா, வைரமுத்துராசா, செல்லத்தம்பி வேலாயுதம் ஆகியோரே கைதான பத்துப் பேருமாவர்.

## படகுச்சேவை இன்று இல்லை

கிளாலி - பூநகரி படகுச் சேவை முன்னர் அறிவித்தது போல் இன்று நடைபெற மாட்டாது. எனினும் படகுச் சேவை வாரம் தோறும் திங்கள், செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கிரமமாக வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். இதன்படி நாளை படகுச் சேவை நடைபெறவுள்ளது.

## யாழ்.செல்லும்ராணுவத்தை தமிழர் எவரும் வரவேற்கார்

### முன்னாள் இராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

எமது இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு அணிவகுத்துச் செல்லுமாயின் எந்தவொரு தமிழ் மகனும் வரவேற்க மாட்டான் என்று முன்னாள் பிரிகேடியர்ரஞ்சன் டி சில்வா தெரிவித்துளளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆட்சியாளர் இராணுவ சிந்தனையை விடுத்து தேசிய நலனில் அக்கறை கொள்ளட்டும். இராணுவ நடவடிக்கைகளை ஒரு அளவோடு வைத்துக் கொள்ளட்டும் என்று மேலும் தெரிவித்தார்.

## ஏழாவது சடலம் கரைஒதுங்கியது

(வடமராட்சி)

பருத்தித்துறை சற்கோட்டையில் மற்றும் ஒரு மீனவர் சடலம் நேற்று முன் தினம் மாலை 7 மணியளவில் மீட்கப்பட்டது

பலாலியைச் சேர்ந்தவரான செபதேஸ் அந்தோனிப்பிள்ளை என்பவரது சடலமே கடற்படையினரின் சூட்டுக்காயங்களுக்கு இலக்கான நிலையில் மீட்கப்பட்டது கடற்படையினரால் கொல்லப்பட்ட ஒன்பது மீனவர்களில் பலாலியைச் சேர்ந்த 6 மீனவர்களின் சடலங்கள் இவற்றுடன் மீட்கப்பட்டுவிட்டன

மேலும் சற்கோட்டையைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமான் - செல்லச்சாமி நட்சத்திர ஹோட்டலில் சந்திப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ். தொண்டமானும் பொதுச்செயலாளர் செல்லச்சாமியும் மீண்டும் கொழும்பில் உள்ள ஐந்துநட்சத்திர ஹோட்டல் ஒன்றில் சந்தித்துப் பேசினார்கள்.

அச்சந்திப்பின் போது தமக்கிடையேயான தகராறுகளை தீர்த்துக்கொள்வது பற்றியும் ஆராயப்பட்டது.

சர்ச்சைக்குரிய 7 மத்திய மாகாணசபை உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர மீதி ஆறுபேரும் அச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

புதன்கிழமை இடம்பெற்ற இந்த இரண்டாவது சந்திப்பின் போது இருவரும் மனம் விட்டுப் பேசினர்.

இதேசமயம் கதிரேசன் என்பவர் மத்திய மாகாண சபையின் தமிழ்க் கல்வி, கைத்தொழில் முகாமைத்துவ அமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இ. தொ. காவின் ஒற்றுமையை சீர்குலைக்க வேண்டாம் என்று திரு. செல்லச்சாமி பத்திரிகைகளுக்கு தெரிவித்துள்ளார்

அலுவலகம் உடைக்கப்பட்டு அங்கிருந்தஆவணங்கள் திருடப்பட்டதனாலேயே தான் பொலிசில் முறைப்பாடு செய்யவேண்டி வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தொழிலாளர் உரிமையை கோரியபோது

## நான்தான் ஜனாதிபதியென டி. பி. ஆத்திரத்துடன் கூறினார்

### தொண்டமான் தெரிவிப்பு

எமது உரிமைகள் பற்றி ஜனாதிபதி டி. பி விஜேதுங்கவிடம் பேசினேன் அப்போது

கட்டுக்கலை சிறி செல்வ வாலிபர் சங்கம், மாதர் சங்

## பிரிட்டிஷ் மின்பிறப்பாக்கி 'வாதுவ' கப்பலில் வரும்

(நமது நிருபர்)

பிரிட்டிஷ் அரசாங்கத்தால்

இருந்து இறக்குவதற்குத் தேவையான நடவடிக்கை

## அரச படைகளால் தமிழர்

(நமது நிருபர்)

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் யாழ். போதனா மருத்துவ மனைக்கு அன்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களுள் ஒன்றான 200 கிலோவாற்று மின் பிறப்பாக்கி வாதுவ கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு இன்னும் சில நாட்களில் எடுத்துவரப் படவுள்ளது.

பிரிட்டனால் அன்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய 8 கொள்கலன்களும் இக்கப்பல் மூலம் எடுத்துவரப்படுகின்றது. இதேவேளை 200 கிலோவாற்று மின் பிறப்பாக்கியை பருத்தித்துறை துறைமுகத்தில் இழுவைப் படகில் இருந்து இறக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை செயலக புனர்வாழ்வு பகுதி எடுத்துள்ளதாகவும், இதுதொடர்பாக மருத்துவ மனைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இப்பாரிய மின் பிறப்பாக்கியை இறக்குவதற்கு பாரம் தூக்கி (கிம்றன்) தேவை எனவும் தற்போது இதற்கான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு பகுதியினர் தெரிவித்தனர்.

மேற்படி கப்பல் வந்ததும் முதலில் பாதுகாப்பாக மின் பிறப்பாக்கி இறக்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டது. (சி)

# மதிய உணவு முத்திரை இலவச சீருடை நிறுத்தம்

மாணவர்களுக்கு வழங்கப் படுகின்ற இலவச பாடநூல்கள் தவிர்ந்த மதிய உணவு முத்திரை மற்றும் சீருடைத் துணி என்பனவற்றை வழங்குவதை சிறிலங்கா அரசு நிறுத்தத் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்சமயம் சிறிலங்கா அரசிற்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியைத் தொடர்ந்து இம்முடிவைஎடுக்க சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

மேலும் அண்மைக்காலங்களில் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியுதவியைக் கொண்டே இவற்றை சிறிலங்கா அரசு வழங்கி வந்தது. எனவே வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியுதவிகளைப் பெறுவதில் தோன்றிய சில சிக்கல்களினாலும் நிதிப்பற்றாக்குறைகளினாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இருந்தும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மாணவர்களிற்கு இவற்றை வழங்கும் தீர்மானமொன்றும் பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவருகின்றது. (பா)

# அமைய ஊழியர்களுக்கு விடுமுறை அதிகரிப்பு

(கொழும்பு)

சேவை ஊர்ஜிதம் செய்யப்படாத (அரசாங்க) ஊழியர்களுக்கு ஏனைய அரச ஊழியர்களைப்போலவே மருத்துவ விடுமுறையாக 24 நாட்களும், சமயாசமய விடுமுறையாக 21 நாட்களும் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதுவரைகாலமும் சேவை ஊர்ஜிதம் செய்யப்படாத ஊழியர்களுக்கு சமயாசமய விடுமுறையாக 21 நாட்களும், மருத்துவ விடுமுறையாக 14 நாட்களும் வழங்கப்பட்டுவந்தது.

# கைதாவது குறித்து விசனம்

தமிழ் இளைஞர்கள் அரச படைகளால்கைதாகி காணாமற்போவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையின் சுவீடிஷ் குழு உறுப்பினர் விசனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கடிதம்மூலம் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் தொடர்புகொண்டு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

1990இல் மூதூரில் பொலிசாரால் கைதாகி காணாமற்போன ஐந்து தமிழ் இளைஞர்களின் கதிபற்றி தாம் அறியவிரும்புவதாகவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை கொழும்பில் சிலபகுதிகளில் மீண்டும் தமிழ் இளைஞர்கள் இரகசியப் பொலிஸாரினால் கைதுசெய்யப்படுகின்றனர். கைதாகும் இளைஞர்கள் மீதான விசாரணையை பொலிஸார் ஆறாம் மாடியில் வைத்து நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் பிரச்சினையை சிங்களவர் உணரவில்லை

## வண பத்தேகம சமிததேரோ தெரிவிப்பு

(கொழும்பு)

பெரும்பான்மை சிங்கள மக்கள் தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவில்லை. அதனால் தான் இனப்பிரச்சினை உருவாகியது.

எனது விகாரையில் கல்வி கற்ற இளைஞர்களை இன்று நான் அங்கவீனர்களாகக் காண்கிறேன். இந்த யுத்தத்திற்கான உடனடித் தீர்வு சமாதானமேயாகும்.

இவ்வாறு வண பத்தேகம சமித தேரோ 'சமாதானத்திற்கான பாதை' என்னும் கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

எங்கள் மக்கள் தூய வெள்ளை உடையில் விகாரைக்கு வந்து மலர் சாத்துவார்கள். பின்பு சமுதாயத்தில் நச்சுக்காற்றைப் பாப்புகிறார்கள். இவர்களைவிடப் பயங்கரமானவர்கள் வேறு

(6ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டை பொலிசார் மீது இராணுவம் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் இருவர் இராணுவத்தினரினால் நையப் புடைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கொழும்புக் கோட்டைப் பகுதியில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

மேற்படி ஹோட்டலில் நடைபெற்ற கலைநிகழ்ச்சி ஒன்றிற்கு வருகைதந்த இராணுவ உயர் அதிகாரி ஒருவர் உட்பட மூன்று இராணுவத்தினர் அங்கு கடமையில் இருந்த இரு பொலிசாருடன் வாக்குவாதப்பட்டனராம். பின்னர் வேறு சில சகாக்களுடன் வந்து பொலிசாரைத் தாக்கினராம். இச் சம்பவம் கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றது.

எமது உரிமைகள் பற்றி ஜனாதிபதி டி.பி விஜேதுங்கவிடம் பேசினேன் அப்போது அவர் மிகவும் ஆத்திரமுற்ற நிலையில் நான்தான் ஜனாதிபதி என்று கூறினார். இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

## தொண்டமான் தெரிவிப்பு

கட்டுக்கலை சிறி செல்வ விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் இ. தொ கா. வின் இன்றைய அரசியல் நிலைபற்றி கண்டி இ தொ. கா. மாவட்டத் தலைவர்கள், வாலிபர் சங்கம், மாதர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், பிரதேச, மாநகர சபை, மாகாணசபை ஆகியவற்றின் உறுப்பினர்களும் அடங்கிய கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'சூரியகந்த' மனிதப் புதைகுழி விவகாரம்

# விசாரணைக்கு ஆணைக்குழு உடன் நியமனம் செய்க!

சூரியகந்த மலையில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதை

## சிறிமாவோ கோரிக்கை

குழி சம்பந்தமாக உடனடியாக ஆணைக்குழு ஒன்றை நியமிக்கவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவில் ஒய்வுபெற்ற நீதியரசர்கள், அரசியல் கட்சிப்பிரதிநிதிகள், மனிதஉரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், இவர்களுடன் தொடர்புடைய வழக்கறிஞர்கள் ஆகியோர் இடம்பெறவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் சம்பந்தமாக ஆராய தொழில்நுட்ப உதவி பெற சர்வதேச அமைப்புகளின் உதவி நாடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் சந்திரிகா குமாரணதுங்கா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## வீரச்சாவு



லெப். விடுதலை அன்ராஜ்

கடந்த ஆறாம் திகதி தொண்டமனாறு பகுதியில் ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். வீரச்சாவடைந்த லெப். விடுதலை / அன்ராஜ் (பரஞ்சோதி சிவனேசன ஆழியவளை தாளையடி) எனும் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

# புதைகுழி விவகாரத்தால் அரசுக்கு நெருக்கடி

## விக்டர் ஐவன் தெரிவிப்பு

(கொழும்பு)

எம்பிலிப்பிட்டியவில் 1989 ஆம் ஆண்டில் காணாமல் போன மாணவர்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்ட பாடசாலை அதிபர், ராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட தண்டனை இன்னமும் வழங்கப்படவில்லை' என ராவய பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்தார்.

சிறிலங்கா இன்று ஒரு தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் சமயத்தில் எதிர்க்கட்சிகள் சூரியகந்த மலையில் மனிதப் புதைகுழிகளைக் கண்டுபிடித்தமை அரசாங்கத்திற்குப் பெரும் இக்கட்டான நிலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### அறிவித்தல்

நியூ விக்ரேஸ் வாடிக்கையாளரின் கவனத்திற்கு 31-12-93க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை 31-1-94க்கு முன் பெற்றுக்கொள்ளவும். 31-1-94க்கு பின் அவற்றை மீளப் பெற முடியாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நியூ விக்ரேஸ், பி. எம். சி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7148)

### உணவு சேவை யாழ்நகர்

மதிய உணவு - மீன், இறைச்சி, மரக்கறி (11:30 - 2:00) சூப்வகை - மரக்கறி மாமிசம் விசேஷ உணவு- புரியாணி, நூடில்ஸ், பிறைட் றையிஸ் பரிமாறும் சேவை வழங்கப்படும் ஓடர்களுக்கு நாடவேண்டிய முகவரி ''காருண்ணியா சைவ ஹொட்டேல்'' 166B, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7168)

### தவறிவிட்டது

5.01.94 இல் புத்தூர் சந்தி - சாவகச்சேரி இடையில் சிறிசுவேந்திரா (சுதன்) என்பவருடைய பிறப்பத்தாட்சிப்பத்திரம், பாடசாலை விலகல் பத்திரம், பரீட்சை பெறுபேறுகளடங்கிய அப்பியாசக்கொப்பி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் திருவருள் ஸ்ரோர்ஸ் வர்த்தக நிறுவனத்தில் ஒப்படைக்கவும். (7173)

### விற்பனைக்கு

அரசாங்க, தமிழீழ விடுமுறை நாட்கள் அடங்கிய படக்கலண்டர்கள் ரூபா 6/- க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்துபெற்றுக் கொள்ளலாம். மற்றும் பெரிய, நடுத்தரக் கலண்டர்களுக்கும்-ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகாமை, ஸ்ரீகாந்தா அச்சகலேன், யாழ்ப்பாணம். (7140)


### பிரம்புத் தொழிலுக்கு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரம்புத் தொழிலில் ஈடுபட்டு மூலப்பொருள் இன்மையால் பாதிக்கப்பட்டு தொழிலை இழந்திருந்த சுமார் பத்து குடும்பங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்


சிறந்த சித்திக்குத் தகுந்த இடம்

**சிவன் கல்வி நிலையம்**

மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி,

**கல்வி ஆண்டு 1994**

ஆண்டு 5 முதல் ***O/L*** வரை
***O/L*** விஞ். கணிதம் வாரத்தில் 4 பாடங்கள்

அநுமதிகளை உடன் பெறுக.

(சி-8320)

முதற் தடவையாக

**A/L 94**

**DAY CLASS**

விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம்: ***10-01-94*** காலை 8-30 மணி

- திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய நான்கு நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
- இவ்வகுப்பு பாடசாலை செல்லாத மாணவர்களுக்குரியது.
- முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்;
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

**பொண்ட் இன்ஸ்ரிரியூட்**

ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

(சி-8272)


ஈழநாதம்

## 4-ம் ஆண்டு நிறைவு

மாணவர்களுக்கான

கட்டுரைப்போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம்


**விக்னா கல்வி நிறுவனம்**

*52, ஸ்ரான்லி றோட், யாழ்.*

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L DAY CLASSES**

(8.00 - 2.00)

ஆரம்பம் : ***10-01-1994***

- பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர்.
- அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்

(சி-8311)

**நாவலர்**

**கல்விக் கழகம்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**கல்வி ஆண்டு -- 1994**

ஆண்டு *3* முதல் ஆண்டு *11* வரை திறமை வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையுடன் .....

**புதிய வகுப்பு: ஆரம்பம்**

**09-01-1994**

ஞாயிறு காலை: ***7-30*** மணி

குறிப்பு:-

- சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
- மாதாந்த பரீட்சையுடன் வகுப்புகள் நடத்தப் படும்.
- விரும்பிய பாடங்கள் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.
- அனுமதிகளை உடன் பெற்றுக்கொள்ளவும்.

(சி-8310)


**31-ம் நாள் நினைவு கூரலும்**

**நன்றி கூறலும்**



## நெல் வயல்களில் எரிவந்தம் நோய்

வலிவடக்குவலிதென்மேற்கு மற்றும் அரியாலை பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் எரிவந்தம் நோய் காணப்படுவதாக சொல்லப்படுகின்றது.

இலைகளில் செங்கருநீல நிறமான கண் போன்ற புள்ளிகள் காணப்படுவது இதன் தொடக்க அறிகுறியாகும். தற்போது குடலை கதிர்வரும் பருவமாக நெற்பயிர் இருப்பதனால் இக்காலத்தில் கொடியிலை அல்லது கழுத்துப் பகுதி தாக்கப்பட்டால் கதிர் முறிந்து முற்றாக பயிர் விளைவு பாதிக்கப்படும்.

அறிகுறி காணப்பட்ட உடன் இந்நோய் பெருகக் கூடிய சுவாத்தியம் காணப் படுவதனால் கசுமின் அல்லது கினோசான் என்ற நாசினியில் 1 அவு 6 கலன் நீரில் கலந்து அல்லது ஒரு மில்லி லீற்றரை ஒரு கலன் நீரில் கலந்து விசிறிக் கட்டுப்படுத்துமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...
## 1994-01-09

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ் - புத்தூர், ஆவரங்கால் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் பண்டிதர் / இளங்கோ** (சின்னத்துரை ரவீந்திரன் - கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

**நேரு** (செல்லையா தில்லைச்சந்திரன் - கச்சேரி, நல்லூர் வீதி - யாழ்)

**கராட்டிரவி / ராஜீவ்** (சோமசுந்தரம் பிரதாபன் 36, ஆடியபாதம் வீதி, நல்லூர் - யாழ்)

**சாமி** (ஆறுமுகம் தவரெத்தினம் - சாமி வீதி, ஆவரங்கால் - யாழ்)

**தவம்** (நடேசு தவராசா - அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் - யாழ்)

**சிவா** (சிவகுரு சிவேந்திரன் - அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் - யாழ்)

இதே முற்றுகையின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**பவான்** (சின்னையா மகேந்திரன் - கதிரவெளி, வாகரை . மட்டு)

1988ஆம் ஆண்டு யாழ் - காரைநகர்ப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது தன்னைத் தானே சுட்டு வீரச்சாவெய்திய -

**லெப். கேணல் பாண்டியன் / குட்டி** (செல்லத்துரை சிறீகரன் - பிரம்படி, கொக்குவில் - யாழ்)

1989ஆம் ஆண்டு யாழ் - பண்டத்தரிப்பில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு அப்பகுதி முகாமில் வைத்து அடித்துக் கொலை செய்யப்பட்ட-

**பேபி** (ஆறுமுகம் குணசேகரம் - தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்)

1990ஆம் ஆண்டு கிளி - பளை, புலோப்பளைப் பகுதியில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். பக்தி** (பரஞ்சோதி நந்தகுமார் - நாவற்குழிச்சந்தி, கைதடி - யாழ்)

**லெப். விக்னா** (யாழ்)

**2-ம் லெப். ஜெகன்** (கதிர்காமத்தம்பி அகிலன் - எழுதுமட்டுவாள், கொடிகாமம் - யாழ்)

யாழ் - மாதகல் பகுதியில் தேசவிரோதக் குழுவினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**மது** (எட்வின் கொறின் - கோண்டாவில் - யாழ்)

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைதாகித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின் பேருந்து நிலையத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட 2 தமிழிளைஞர்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பெரு நிலப் பரப்பிலிருந்து பிரம்பை பெருமளவில் கொண்டுவந்து கொடுத்துள்ளது.

இவ்வாறு உள்ளூர் மூலப் பொருளை பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழிலாளர்களுக்கு உதவும் முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயற்படும் தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

### கலந்துரையாடல்

வலிகாமம் கோட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடல் கடந்த புதனன்று நடைபெறவிருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

இக் கலந்துரையாடலில் கிராமிய உற்பத்திக்குழுக்கள் அனைத்தும் தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## முதலிடம் பெற்றார்

(பருத்தித்துறை)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய இரசாயனக் கட்டுரைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் செல்வன் தியாகராசா அரவிந்தன் முதலாம் இடத்தைத் தட்டிக்கொண்டுள்ளார். இப் போட்டிகளுக்கான பரிசில்கள் இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தமகாநாட்டில் அண்மையில் அதன் பிரதம விருந்தினரால் வழங்கப்பட்டது (25)

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

**தலைப்பு:**

## "போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?"

**போட்டி விதிகள்:**

- கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- கட்டுரையாளரின் பெயர் முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
- போட்டி முடிவுகள் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.
- இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப் படும்.
- முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.
- கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

**ஆசிரியர்**

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.



## தம்பையா தியாகராஜா

தோற்றம் : 10-06-1932

மறைவு : 10-12-1993

விழிமூடிய தந்தையை
வழியனுப்பும் வைபவத்தில்
பங்கு கொண்டும்,
ஆறாத் துயரைப் போக்க
தேறுதல் தந்தும்
அரவணைத்து நின்ற
அனைவருக்கும் எம் நன்றி.

- குடும்பத்தினர்

'இலட்சுமி பவனம்'
பருத்தித்துறை வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். (இ)

கப்பட்டு பின் பேருந்து நிலையத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்ட 2 தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டு - சந்திவெளித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். யோசப் / அங்கயன்** (செல்லத்துரை சுபாகரன் - அக்கரைப்பற்று-அம்பாறை)

**விக்கினேஸ்வரன் / பரந்தாமன்** (கணபதிப்பிள்ளை கணேஷ் - அக்கரைப்பற்று - அம்பாறை)

மட்டக்களப்பு - பாலையடிவெட்டை முகாமிலிருந்து மட்டு - அம்பாறை எல்லையோர 3-ம் குடியிருப்பு முகாமிற்கு ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**நளினன்** ( — தில்லைக்கண்ணன் - புல்லுமலை- மட்டு)

மட்டக்களப்பு காக்காச்சி வெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் உயிர்நீத்த நாட்டுப்பற்றாளரான -

**ஆனந்தன்** (மட்டக்களப்பு)

1993ஆம் ஆண்டு மணலாறு - கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் முத்துச்செல்வன்/ஆனந்தகுமார்** (குஞ்சன் மதியழகன் - பூநகரி - மன்னார்)

**லெப். இளமாறன்/சூரியகுமார்** (தேவராசா சதீஸ்வரன் - ஆதிகோயிலடி-வல்வெட்டித்துறை)

திருமலை - கடவானைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். குரலமுதன்/விமல்** (சித்திரவேல் சந்திரகாந்தன் - 3-ம் பிரிவு, தோப்பூர்-திருமலை)

வவுனியா - படுகந்தை முகாமிலிருந்து பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கிச் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஓமந்தை, பன்றிக்கெய்தகுளத்தைச் சேர்ந்த தமிழிளைஞன்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

✻ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8319)

யாழ்ப்பாணம்

## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு வைபவம் - 07-01-94

1992/93ஆம் ஆண்டுக்கான மூலதன நன்கொடையின் கீழான நிதியுதவியுடன் சனசமூக நிலையங்களின் கீழியங்கும் பாலர் பாடசாலைகளுக்கு வழங்குவதற்காக எம்மால் செய்யப்பட்ட ஊஞ்சல் மற்றும் ஏற்றப் பலகைகளை கீழ்க்காணும் சனசமூகநிலையத்தினரிடம் 07-01-94ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு மாநகரசபை அலுவலக வளவில் வைத்து வைபவ ரீதியாகக் கையளிக்கப்பட்டது.

01. கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம்
02. கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம்
03. கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையம்
04. பாரதி (திருநகர்) சனசமூக நிலையம்
05. அறிவொளி(ஆறுகால்மடம்) சனசமூக நிலையம்
06. அன்னை வேளாங்கன்னி சனசமூக நிலையம்
07. எழிலூர் (துண்டி) சனசமூக நிலையம்
08. மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்
09. புனித பதுவையார் சனசமூக நிலையம்
10. கலைவாணி சனசமூக நிலையம்
11. அருணோதயா சனசமூக நிலையம்
12. பாரதியார் சனசமூக நிலையம்
13. சென். நீக்கிலஸ் சனசமூக நிலையம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
07-01-1994.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-8312)

## சித்தவைத்திய கூட்டுறவுச் சங்க மாதாந்தக் கலந்துரையாடல்

பிரதேச சித்த வைத்திய நிலையங்களின் வைத்தியக்கலாநிதிகளும், ஏனையசித்தவைத்தியபல்கலைக்கழக விரிவுரையாளர்களும், தனிப்பட்டசித்தவைத்தியக்கலாநிதிகளும் பங்கு கொள்ளும் மாதாந்தக் கருத்தரங்கு ஏற்கனவே நிர்ணயித்ததற்கு அமைவாக 09. 01. 94 ஞாயிற்றுக்கிழமை (இன்று) பி. ப. 2. 30 மணிக்கு இல. 572, யாழ்ப்பாண மருத்துவமனை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுத் திணைக்களப் பணிமனையில் இடம் பெறும். குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் சமுகம் தரும் வண்ணம் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

செயலாளர்
சி. வை. கூ. சங்கம்

(இ-8316)

சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவர்
ச. நமசிவாயம் அவர்கட்கு
யாழ் வர்த்தகர் சங்கத்தின்

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி வர்த்தகர் சங்கத் தலைவரும், சமூகத் தொண்டருமான அமரர் ச. நமசிவாயம் அவர்களின் மறைவின் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தினருக்கும் எமது யாழ் வர்த்தகர் சங்கம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

-செயலாளர்

(8318)

## 60-ம் நாள் கண்ணீர்த்துளிகள்



### 2-ம் லெப்டினனட் விடுதலை
(பாலசிங்கம் மங்களசிறி)
(துன்னாலை தெற்கு)

ஈழத்தின் சொத்தாய்
05- 03- 75

ஈழத்தின் வித்தாக
11- 11- 93

விடுதலை என்னும் பெயருடன்
தமிழீழ விடுதலையை மீட்டெடுக்கவென
தலைவன் தானையிலே அணிசேர்ந்து
தென்மராட்சி கோட்டத்திலே
சிறப்புடனே கடமை உணர்வுடனே பணிபுரிந்து
பூநகரி தளத்தை எமது படைகள் முற்றுகையிட்ட வேளை
வீரத்துடன் புறப்பட்ட எங்கள் விடுதலைஅண்ணாவே
எங்கே உங்கள் திருமுகம் காணாது தவிக்கின்றோம்.

லீமா வீதி.
துன்னாலை தெற்கு,

தென்மராட்சி கோட்ட
நண்பர்கள்

(5082)

# சிறிலங்கா அரசு குண்டுவீசி குடாநாட்டு மக்களை கொல்லுகிறது

### கவுண்டர் பொயின்ற் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் உரிமைகளை சிறிலங்கா அரசு மறுப்புத் தெரிவித்து வருவதாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'கவுண்டர் பொயின்ற்' ஆங்கில இதழ் குற்றம்சாட்டியுள்ளது.

அச்சஞ்சிகை மேலும் குறிப்பிடுகையில், கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக யாழ்ப்பாண மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும், மின்சாரத்தடை, எரிபொருள் தடை என்பவற்றால் அடிப்படை வசதிகள்கூட அற்ற நிலையில் மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தடையுடன் திட்டமிட்ட விமானத் தாக்குதல்களால் சிறிலங்கா அரசு யாழ்ப்பாண மக்களை கொலை செய்து வருவதாகவும், சொத்துக்களை அழித்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குண்டு வீச்சுக்களாலும், எறிகணைத் தாக்குதல்களாலும் மாணவர்களால் படிக்க இயலவில்லை எனவும் உடல் ரீதியாக மட்டுமன்றி உள ரீதியாகவும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## தமிழகக் கரையில் இலங்கை மீனவர் கைது

கன்னியா குமரியில் இலங்கை மீனவர்கள் நான்கு பேரை கடந்த வியாழன் தமிழ் நாடு பொலிசார் கைது செய்தனர். கடந்த இரண்டாம் திகதி தாம் கடலுக்கு சென்றதாகவும், கடற்கொந்தளிப்பு, கடும்காற்று காரணமாக தமது இயந்திரப்படகு கட்டுப்பாட்டை இழந்து விட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இவர்களது படகுகளையும் சில மீன்பிடி வலைகளையும் பொலிசார் பறிமுதல் செய்தனர்.

## பாலர் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையினால் அதன் எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ் உபகரணங்கள் 1992, 93 ஆம் ஆண்டிற்கான யாழ் மாநகர சபையின் மூலதன நன்கொடை நிதியின் நிதியுதவியுடன் யாழ் மாநகர சபையின் வேலைத்தளப்பகுதியினரினால் தயாரிக்கப்பட்டது.

இதற்கமைய ஒவ்வொரு சனசமூகத்திடமும் ஆகக் குறைந்தது ஓர் ஊஞ்சல் ஓர் ஆடும் பலகையும் கிடைத்துள்ளது. ஏனைய சனசமூக நிலையங்களிற்கு 1994 ஆம் ஆண்டு எதிர்வரும் காலப்பகுதிகளிலும் செய்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (பா)

## பரிசளிப்பு விழா

யாழ். அச்சுவேலி மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை காலை 9-00 மணிக்கு கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## விஞ்ஞான தினம்

யாழ். மாவட்ட கல்லூரி மாணவர்களுக்கான விஞ்ஞான தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் விஞ்ஞானப் பேச்சுப் போட்டி, விஞ்ஞான வினா விடைப் போட்டி என்பன நடைபெறவுள்ளன. பரிசுபெற்ற மாணவர்களுக்கு யாழ். விஞ்ஞான சங்கம் பரிசுகளை வழங்கவுள்ளது.

## வெள்ள நிவாரணம் வழங்குவதில் வவுனியாவில் பாரபட்சம்

(வவுனியா)


வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத பிரதேசங்களில் வாழ்வோருக்கு வெள்ள நிவாரணம் வழங்க சிறிலங்கா அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

அத்துடன் வவுனியாவிலிருந்துபொருள்களை எடுத்து வருவதற்கும் சிறிலங்கா அரசு பல்வேறு கட்டுப்பாடுகளையும் நாளாந்தம் விதித்து வருகிறது. இதனால் அப்பகுதி மக்கள் உணவுப் பொருள்கள் முதல் தமக்குத் தேவையான பொருள்களைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை வவுனியாப் பகுதி கூட்டுறவு சங்கங்களின் தலைமைக் காரியாலயமும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள நகரப் பகுதியிலேயே இருப்பதால் உணவு முத்திரைக்கான பொருள்களின் விநியோகமும் தாமதத்துடனேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# கண்ணீர் அஞ்சலி





30-12-93 அன்று சாவகச்சேரியில் இடம் பெற்ற சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய கண்மூடித்தனமான வான் தாக்குதலில் காயமடைந்து பின் மரணத்தைத் தழுவிக்கொண்ட;

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத்தலைவரும், அம்பிகா மருந்தக உரிமையாளரும், சிறந்த அறிவாளரும், தென்மராட்சி மக்களுக்கும் - தமிழ் சமூகத்திற்கும் அளப்பரிய சேவையைச் செய்தவருமாகிய

## "சிவநெறிச்செம்மல்"

# உயர்திரு. சங்கரப்பிள்ளை நமசிவாயம்

தோற்றம்: **22-08-1937**

மறைவு: **06-01-1994**

அவர்களின் எதிர்பாராமறைவுக்கு

எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

சாவகச்சேரி

(5083)

**கைத்தொழில் வர்த்தகர் சங்கம்**

## 9-வது வெற்றுப் போத்தல் பரிசு குலுக்கல் போட்டியில்

### பரிசு பெற்றோர் இலக்கங்கள் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1609 | 1687 | 3669 | 4512 |
| 1611 | 2595 | 3907 | 4516 |
| 1613 | 2697 | 3951 | 4518 |
| 1669 | 3186 | 4111 | 4523 |
| 1675 | 3193 | 4312 | 4537 |
| 1676 | 3213 | 4315 | 4554 |
| 1677 | 3222 | 4316 | 4556 |
| 1679 | 3470 | 4324 | 4558 |
| 1682 | 3495 | 4335 | 4873 |
| 1684 | 3666 | 4406 | 5070 |

10 ஆவது போட்டியில் இன்றே பங்குபற்றுங்கள் பங்கு பற்றுவதற்கான நிபந்தனை ஜாம், கோடியல் அல்லது பியர் ஏதாவது 5 போத்தல்களை கொடுத்து அதற்கான பணத்துடன் ஓர் அதிர்ஷ்ட லா ப ச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும்.

**TASTE LINE INDUSTRIES (PVT) LTD,**
**14, Seenier Lane, Jaffna.**

(கி-8313)


## 90-ம் நாள் நினைவஞ்சலி



தாயின்மடியில்:
14-4-1977

வீரச்சாவு:
12-10-1993

### 2-ம் லெப். கலைவாணன் (நேரு)
(மகானந்தராசா கோணேஸ்வரன்)
கப்புதூ, கரவெட்டி

12-10-93-ம் திகதி முல்லைத்தீவில் வீரச்சாவடைந்த எங்கள் மகன் கலைவாணனின் 90-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியைகளும் மதிய போசனமும் இன்று ஞாயிறு எமதில்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைத்துப் போராளிகளையும், உற்றார், உறவினர்களையும், கலந்து கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.

கப்புதூ,
கரவெட்டி. - பெற்றோர்


(7014)

## 1-ம்ஆண்டு நினைவஞ்சலி

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1945- 12- 19

மறைவு
1993- 01- 19



அமரர்
### திரு. S. மார்க்கண்டு
(பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்)
திதி: 9. 1. 1994

மறைந்தும் மறையாத எங்கள்
குடும்பத்தின் குன்றாத ஒளிவிளக்கே!
ஆண்டொன்று ஆனபோதும்
உங்கள் இனிய அன்பு எம்மை
விட்டு உறங்காது என்றும்
தங்கள் இல்ல ஞானவைரவர்
ஆலயத்தில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய அனுதினமும்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்

தவசிகுளம்
கொடிகாமம்.

(சி-8321)

## நெஞ்சில் நீங்காத 24 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

மைந்தனாய்
1970.01.09

மாவீரனாய்
1990.08.05



### கப்டன் ஜொனி
(தெட்சணாமூர்த்தி சத்தியதாஸ்)

''ஏழ் பத்தாம் ஆண்டினிலே
மகிழவைத்தீர் புவியினிலே
இன்று நாம் உமை நினைந்து

## ரயில் மோதி இளைஞர் காயம்

(கொழும்பு)

வவுனியாவில் ரயிலில் மோதுண்ட பிரயாணி ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த 36 வயதுடைய எஸ். பிரபாகரன் என்பவரே மேற்படி ரயிலில் மோதுண்டார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## நல்லின ஆடுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி விவேகானந்தா நகர் கிராமத்திலுள்ள பன்னிரண்டு பயனாளிகளுக்கு நல்லின ஆடுகள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. ஒரு பயனாளிக்கு ஐந்து ஆடுகள் வீதம் அறுபது ஆடுகளும்இனப் பெருக்கத்திற்கான கடாக்களும் பயனாளிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதுடன் பராமரிப்பு மற்றும் நோய்த்தடுப்பு பற்றிய விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

## கால்நடை மேய்க்கும் திட்டம்நடைமுறையில்

(யாழ்ப்பாணம்)

கால்நடைகளால் ஏற்படும் பயிரழிவைத் தவிர்க்கும் நோக்குடன். மாடு மேய்க்கும் திட்டமொன்றினை யாழ் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இத் திட்டத்தை தற்போது நல்லூர் வட்டத்தில் அரியாலை மத்திவடக்கு, மற்றும் அரியாலை மத்தி ஆகிய இரண்டுகிராமிய உற்பத்திக் குழுக்களும் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகின்றன.

## குழாய்க் கிணறு அமைக்க முயற்சி

மன்னார் மாவட்டத்தில் முழங்காவில் பகுதியில், இரணை மாதா நகர் கிராமத்தில் குழாய்க்கிணறுஒன்றை அமைக்கும் பணியில் கிராமிய உற்பத்திக் குழுவின் ஊடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈ.டுபட்டுள்ளது.

## குளங்கள்புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியாக் கோட்டத்திலுள்ள ஓமந்தை, பூவரசங்குளம், நயினா மடு வட்டங்களில் இருக்கும் பல்வேறு குளங்களையும் புனரமைப்பதிலும், குளங்களை ஆழமாக்குவதிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

## கண்ணீர் அஞ்சலி

வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின்
சமாஜம்
சிவநெறிச் செம்மல்
### ச. நமசிவாயம்
(தலைவர், கைத்தொழில் வர்த்தகர் சங்கம்,
சாவகச்சேரி)

06. 01. 94 இல் அமரத்துவம் எய்திய சிவநெறிச் செம்மல் திரு. ச. நமசிவாயம் அவர்கள் ஆத்மீகத் துறையில் ஆற்றிவந்த பணிகளையும், வர்த்தகத்துறை மூலமும், வர்த்தக சங்க மூலமும் இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும்பிரார்த்திக்கிறோம்.

- செயலாளர்

(கி-8317)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### 2-ம் லெப். ஈழவேந்தன்
(இராசரெட்ணம் இராஜ்குமார்)
(மண்டைதீவு)

மலர்வு
1975-1-14

வீரச்சாவு
1993-11-26

மாண்புறு மக்கள் வாழும் மண்டை தீவுதன்தென்பாலில்
தான் பெறு தவத்தினாலே தனையனாய் பெற்றார்
அவ்வூர்
இராசரெத்தினத்தோடன்னை வசந்த கோகுலமும்
சேர்ந்து
ஈழத்து வேந்தனை இராஜ்குமார் நாமத்தானை
அண்ணன்மார் வெளியே செல்ல அதுதனை
பொறுக்கான் போல்
அன்னை மண் காப்பேன் நானென்று அசைவிலா
உறுதி பூண்டாய்
தொண்ணூற்று ஒன்றாம் ஆண்டில் சுகம் தரும்
வீட்டை விட்டு
அண்ணனை அடைந்தாய் உன்னை அழைத்தனர்
ஈழவேந்தன் என்று
தலையிலே வேட்டைத் தாங்கி தாரணி போற்றும்
வேந்தா நீயும்
அண்ணைமார் தங்கையர் பெற்றோர் அனைவரையும்
ஆறாத துயரத்தில் ஆழ்த்தி விட்டு
ஈழமண் காத்திடவே சென்றுவிட்டாய்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

**திதி: 30-12-1993**



திருமதி

## சொர்ணம்மா சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற தாதி)

மலர்வு 02-11-1926 — உதிர்வு 09-01-1993

அன்பின் உருவாய் அழியாப் புகழ் கொண்டாய்
தொண்டுகள் பல செய்தாய் புகழின் சிகரம் ஓதினாய்
இன்னலுற்ற ஏழை மனங்களில் இடம் கொண்டாய்
இனிய உன் வார்த்தைகள் தொண்டுகள் மறப்போமோ

தோன்றிற் புகழோடு தோன்றுக என்ற
வள்ளுவத்தின் மொழி மெய்ப்பித்தாயே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தாய் உன்னை
வையகம் போற்ற மறக்குமா?

பெண்ணின் திலகமாய்த் திகழ்ந்தாயே
பெருமைகள் பல பெற்று வாழ்ந்தாயே
காலன் உன்னைக் கவர்ந்தாலும்
கலா உன் கனி மொழி மறப்போமோ!!

உங்கள் நினைவால் கவலை கொண்டுள்ள
அன்புக் கணவர் சுப்பிரமணியம்
(பிரபல வர்த்தகர்)
மருமகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

இடைக்காடு.

(8299)

''ஏழ் பத்தாம் ஆண்டினிலே
மகிழவைத்தீர் புவியினிலே
இன்று நாம் உமை நினைந்து
ஏங்குகின்றோம் ஈழமதில்''

இன்று 24 ஆவது பிறந்த தினத்தில் உம்மை நினைவுகூரும்.

பலாலி வீதி,
திருநெல்வேலி-வடக்கு. (7175)

குடும்பத்தினர்
நண்பர்கள்.

# 60-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 8 - 4 - 68

தமிழீழ மண்ணில்: 11 - 11 - 93

## 2-ம் லெப்டினன்ட் ஜேசுதாஸ்

(கந்தையா ரவிராஜ்)

பூநகரிப் போரினிலே படை மலிந்த எதிரியை
ஆவென்ன அலறவைத்த ஆருயிரே ஜேசுதாஸ்
பாவினிலே வெற்றிமழை பாடிவரும் வேளையிலே
நீயில்லை நாம் கண்டு நல்லிதயம் மகிழ்ச்சியுற

இவரோடு மரணித்த ஏனைய சகல மாவீரரையும் நினைவுகூருகின்றோம். 9-1-94(இன்று)எமதுஇல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியையில் சகபோராளிகள், உறவினர். நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

அன்பின் சகோதரர்

**வே. பொன்னுச்சாமி குடும்பத்தினர்**

தற்போதைய முகவரி:
கந்தையா பாலசுப்பிரமணியம்
காளிகோவிலடி,
வட்டுத் தெற்கு,
வட்டுக்கோட்டை.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு,
சில்லாலை.

(7174)

...லை இருக்கும் பல்வேறு குளங்களையும் புனரமைப்பதிலும், குளங்களை ஆழமாக்குவதிலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் அவ்வப்பகுதி மக்களும்இணைந்து குளக்கட்டுகளிலுள்ள மந்துக்காடுகளை வெட்டித் துப்புரவாக்கியும், ஆழப்படுத்தியும்சிறுசிறு குளங்களை புனரமைத்தும்வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தலையில் வேட்டைத் தாங்கி தாரணி போற்றும்
வேந்தா நீயும்
அண்ணைமார் தங்கையர் பெற்றோர் அனைவரையும்
ஆறாத துயரத்தில் ஆழ்த்தி விட்டு
ஈழமண் காத்திடவே சென்றுவிட்டாய்
இருபத்தாறாம் திகதி பதினொராம் மாதமதில்
இந்நாள் உன் நாமத்தால் இம்மண் பெருமை பெறும்

இன்று எமதில்லத்தில் நிகழும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்கின்றோம்

ஐந்து சந்தி, நாவலர் றோட்
யாழ்ப்பாணம்.

பெற்றோர்
அண்ணன்மார்,
தங்கையர்.

(7134)

# நினைவஞ்சலி

**60-ம் நாள்**



லெப்.
**கலைஞன் (ரகீம்)**
(சுப்பிரமணியம் சத்தியசீலன்)
(பருத்தித்துறை வீதி, மயிலிட்டி)
தாயின் மடியில் 05.02.1970
வீரச்சாவு 11.11.1993

**104-ம் நாள்**



2-ம் லெப்.
**காந்தரூபன்**
(சேனாதிராசா ஜெயகாந்தராசா)
(6-ம் வட்டாரம், மயிலிட்டி)
தாயின் மடியில் 31.03.1976
வீரச்சாவு 28.09.1993

**60-ம் நாள்**



லெப்.
**மலரோன் (சோபிதன்)**
(அருமைநாயகம் முரளிதரன்)
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி)
பிறப்பு 06.09.1973
வீரச்சாவு 11.11.1993

காங்கேசன்துறை வீதி,
பருத்தித்துறை. (7135)

இடம்பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர்
ஒருங்கிணைப்புச் சங்கம்

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

எந்த மனிதனும் நீண்ட நேரத்திற்கு தனக்குத் தானே ஒரு முகம் அணிந்து, ஊராருக்கு ஒரு முகம் காட்டிக் கொண்டிருந்தால் எது உண்மையான முகம் என்று அறியாமல் இறுதியில் தானே திகைப்பை அடைவான்.

-நந்தேனியல் ஹார்தாரன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05


# பத்திரிகைகளுடன் அரசு தொடுத்துள்ள போர்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும், கொழும்பிலிருந்து வெளிவரும் அரசு சார்பு பத்திரிகைகள் தவிர்ந்த அநேக பத்திரிகைகளுக்கும் | பத்திரிகையாளர்களுக்கும் இடையில் போர் ஒன்று ஆரம்பித்துள்ளதெனலாம். இதில் அரசாங்கம் சாம, பேத, தான, தண்டம் ஆகிய நான்கு வழிமுறைகளையும் கடைப்பிடிக்க தயாராகவுள்ளமையும் தெரியவருகின்றது.

கடந்த வருடத்தில் குறிப்பாக மண்கிண்டி மலையில் ஏறபட்ட இராணுவத் தோல்வியில் இருந்து கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள் பல அரசாங்கத்தின் கொள்கைகளை வெளிப்படையாக விமர்சிக்கவும், கண்டிக்கவும் தொடங்கின, இது பின்னர் ஒப்பரேசன் யாழ்தேவித் தோல்வி, பூநகரி முகாம் தகர்ப்பு என்பனவற்றோடும், மத்திய தென்மாகாணசபை விவகாரங்களில் அரசாங்கம் நடந்துகொண்ட விதத்திலும் விமர்சனங்களும் கண்டனங்களும் அதிகரித்துச் சென்ற வண்ணம் இருந்தன.

இதேவேளை அரசாங்கம் பத்திரிகைகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவசரகாலச் சட்ட விதிகளைப் பயன்படுத்தும் முயற்சியில் இறங்கியது. இது பத்திரிகைகளினதும், பத்திரிகையாளரினதும் எதிர்க்கட்சிகளினதும் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியது.

இந்நிலையில் வெளிவந்த ''சூரியகந்த'' மனிதப் புதைகுழி விவகாரம் மேலும் அரசாங்கத்திற்கும் பத்திரிகைகளுக்கும் இடையில் பெரும் மூறுகல் நிலையை ஏற்படுத்தக் காரணமாகியது. இவ்விடயத்தில் பத்திரிகைகள் எடுத்துக்கொண்ட தீவிர கவனமானது அரசாங்கத்திற்கு உள்நாட்டிலும், வெளிநாட்டில் இருந்தும் பல நெருக்கடிகளை உருவாக்குபவையாக இருந்தன.

அரசாங்கத்திற்கு எதிரான இந்நிலைப்பாட்டை ஏற்கனவே சிறிலங்கா அரசாங்கத்தின் போக்கை கடுமையாக விமர்சித்துவந்த பத்திரிகைகளும், தொடர்ச்சியாக ஏற்பட்ட இராணுவத் தோல்வியால் அரசாங்கத்தின் திறமையின்மையை விமர்சித்த பத்திரிகைகளுமே எடுத்துக் கொண்டன. இதேவேளை அரசாங்கசார்பு பத்திரிகைகள் வெளிவரும் உண்மைகளை மூடிமறைக்கவோ அன்றி

# வெளிநாட்டு தபால்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு

## தபால்மாஅதிபர்

(கொழும்பு)

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலும், தபால் அலுவலகங்களிலும், வெளிநாட்டு தபால்கள் களவாடப்படுவதாக கிடைக்கும் புகார்கள்தொடர்பாக கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று தபால் அமைச்சு அறிவித்துள்ளது. இது சம்பந்தமாக தீர்மானம் எடுத்து அமுல்படுத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி முதலாம் திகதி முதல் செயற்படத் தொடங்கும் இக்குழு என்று தபால்மா அதிபர் தர்மசேன திசாநாயக்கா கூறியுள்ளார்.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து தபால் அலுவலகங்களுக்கு வெளிநாட்டு தபால் பைகள் நேரடியாகவே அனுப்பப்படுமென்றும், இவை வெளிநாட்டுத் தபால்கள்தான்என்பதை எளிதில் அடையாளம் காணக் கூடியதாகமஞ்சள்நிறகன்வஸ் உறைகள் பயன்படுத்தப்படுமென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு தபால்பிரிவில் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்பதுடன் ஒப்பந்த அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தும் முறை ஒழித்துக்கட்டப்படும். வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் தபால்களுக்கும், வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட இருப்பதோடு அவதானிப்பு வசதிகளும் செய்யப்படவுள்ளன.

## ஐ. தே. க. உறுப்பினர் புத்திரசிகாமணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

மத்திய மாகாண சபை உறுப்பினர் புத்திரசிகாமணி ஐ.தே. கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

கட்சியின் கொள்கைக்கு எதிராகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பான குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் ஒழுங்கு விசாரணை நடத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

## மன்னாரில் பயிற்சி வகுப்பு

மன்னார் மாவட்டத்தில் உருளைக் கிழங்கு செய்கை பண்ணுவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் முன்னோடி நடவடிக்கையாக மன்னார் மாவட்டம் விநாயகபுரம் விவசாய கூட்டுறவு சங்கத்தின் ஆதரவுடன் உருளைக் கிழங்கு செய்கைக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டுள்ளது.

## கடமை ஏற்க பணிப்பு

(நல்லூர்)

இடமாற்றம் செய்யப்பட்ட கல்வித்திணைக்கள இணைந்த சேவை உத்தியோகத்தர் அனைவரும் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்பாக புதிய கல்விக் கோட்ட அலுவலகங்களில் கடமைப்பொறுப்பை ஏற்க வேண்டுமென யாழ்ப்பாணவலயத்திற்கான கல்விப் பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பி பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த ஜனவரி முதல் இடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் ஏற்கனவே தமது புதிய அலுவலகங்களில் சென்று கடமையைப் பொறுப்பேற்றிருப்பதாகவும் யாழ் கல்வித்திணைக்கள செய்திகள் கூறியுள்ளது.

## கடமை ஏற்க முடியாதநிலையில் தீவக ஆசிரியர்கள் நால்வர் திணறல்

(நல்லூர்)

நெடுந்தீவுப்பகுதிப் பாடசாலையிலிருந்து ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு தெரிவாகி பயிற்சியை முடித்த ஆசிரியர்கள் மீண்டும் கடமையை பொறுப்பேற்க முடியாத நிலை தோன்றியுள்ளது தற்போது புதிய கல்விக் கோட்டங்கள் செயற்படத் தொடங்கிஇருப்பதால்நெடுந்தீவு தனியொரு கல்விக் கோட்டமாக இயங்குகின்றது கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையில் பயிற்சியை முடித்த ஆசிரியர்கள் நான்கு பேரையும் மீண்டும் நெடுந்தீவு கல்விக்கோட்டத்திற்கு சென்று கடமை ஏற்கும்படி கல்வித்திணைக்களம் பணிப்புரை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணப் பகுதியில் செயற்படும் தீவகப் பாடசாலைகளில் கடமையாற்ற அனுமதி வழங்குமாறு இந்த ஆசிரியர்கள் விடுத்த கோரிக்கை யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளராலும் தீவகக் கோட்ட கல்வி அதிகாரியினாலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டினுள் இருக்கும் பகுதிக்கு செல்ல தயக்கம் தெரிவித்துள்ள இவ் ஆசிரியர்கள் இதனால் தமது கடமையை

## பனம் விதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை தென்னை வள அபிவிருத்திப்பகுதி மேற்கொண்டு வரும் பனை நடுகைத்திட்டத்தின் கீழ் கோண்டாவில் பகுதியில் 2000 பனம் விதைகளும், பூநகரிப் பகுதியில் 11, 500 பனம் விதைகளும் பள்ள மடுமுதல் இலுப்பக் கடவை வரை 2000 பனம் விதைகளும், அரியாலையில் 1000 பனம் விதைகளும், பெரிய மடுப்பகுதியில் 6000 பனம் விதைகளும், பளைப் பகுதியில் 1075 பனம் விதை

## தோல் பதனிடல் முயற்சி வெற்றி

உள்ளூரில் கிடைக்கின்ற தோல்களை பதனிடும் முயற்சி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருப்பதாக. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டிருக்கும் செய்திக் குறிப்பில் மேலும் பதனிடப்பட்ட தோலில் இருந்து தற்போது பல்வேறு பொருள்களும் உற்பத்தி செய்யப்படுவதாகவும்

# தேர்தல் கமிசனுக்கு எதிராக குற்ற விசாரணை தாக்கல்?

## வி. என். காட்கில்

(டில்லி)

தலைமைத்தேர்தல் ஆணையாளருக்கு எதிராக தேவையேற்படின் குற்ற விசாரணை கோரும் மனு கொண்டுவரப்படலாம் என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி.என். காட்கில் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ராஜ்ய சபாவின் எம். பிக்கள் சிலர் தாங்கள் வசிக்காத மாநிலங்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கிறார்களா என்பதை கண்டறிய விசாரணை நடத்தப் போவதாக தேர்தல் ஆணையகம் கூறியிருந்ததைக் கண்டித்திருப்பதுடன், ராஜ்ய சபாவுக்கு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதி ஒருவர் தாம் தேர்ந்தெடுக்கப்படும் மாநிலத்திலேயே வசிப்பவராக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் ஆணையகத்தின் ஆணையை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆப்கானில் யுத்த நிறுத்தம் நேற்று முதல் அமுல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் நேற்று ஒரு நாள் சண்டை நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க இணக்கம் காணப்பட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் அமுலுக்கு வரும் இந்த சண்டை நிறுத்த காலத்தின் போது காயமுற்றவர்களும், வெளிநாட்டு ராஜதந்திரிகளும், பொதுமக்களும் சண்டை இடம்பெறும் பகுதிகளிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம்வெள்ளிக்கிழமை காலையில் துருப்புக்கள தொழுகைக்காக தமது ஆயுதங்களைக் களைந்தது முதல் தலைநகர் காபூலில் மோதல்கள் எதுவும் இடம் பெறவில்லையெனக் கூறப்படுகிறது.

# காவிரியில் நீர் வரத்து ஆராய குழு நியமனம்

(சென்னை)

காவிரிப்படுகையில் நீர் வரத்து பற்றி மதிப்பீடு செய்வதற்கு நிபுணர்கள் அடங்கிய நிலைக் குழுவொன்றை நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. மத்திய நீர் வளக் கமிஷன் மற்றும்காவிரியின் கீழ் பாசனம் பெறும் மாநிலங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக இக் குழு அமைக்கப்படுகின்றது. புதுடில்லியில் நடைபெற்ற மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாகபுதுடில்லியில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காவிரி நடுவர் மன்றத்தின் பணிகளை இந்த நிலைக்குழு அமைப்பு எவ்வகையிலும் பாதிக்காது எனவும் கூறப்படுகின்றது

# கர்நாடக காங்கிரசின் நெருக்கடி விரைவில் தீர்த்து வைக்கப்படும்

## டாக்டர் ஜகன்நாத் மிஸ்ரா

(பெங்களூர்)

கட்சியின் மாநிலப் பிரிவில் ஒழுங்கை மீண்டும் நிலைநிறுத்த தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும், சட்டப் பேரவை இம்மாதம் 17-ம் திகதியன்று மீண்டும் கூட்டப்படமுன் இன்றைய நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுவிடும் எனவும் காங்கிரஸ் கட்சியின் மத்திய பார்வையாளராக பெங்க

அப்போது அவர் மாநில காங்கிரஸ் கிளையில் ஏற்பட்டுள்ள பூசல்களுக்கு விரைவில் தீர்வு காணமுடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

## பாகிஸ்தானில் கூட்டணி

(இஸ்லாமாபாத்)

திரிவுபடுத்திவிடக்கூடியதாகவோ இருக்கவில்லை. ஆகையால் அவை மௌனமாகவே இருந்தன.

இந்நிலையில்தான் அரசு பத்திரிகைகளுடன் தனது போரை ஆரம்பித்ததெனலாம். அதாவது அவசரகால விதியால் முடியாததை ஏனைய அணுகுமுறைகள் மூலம் தீர்க்க முற்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ''சூரியகந்த'' விவகாரங்கள் பத்திரிகைகளின் முன்பக்கத்தில் வெளிவருவதைத் தடை செய்யும் நோக்கில் பத்திரிகைக் காரியாலயங்களுக்குச் சென்று அழுத்தத்தைப் பிரயோகித்தார். இதன் விளைவாக செய்திகளும் இருட்டடிப்புச் செய்யப்பட்டன.

இதன் அடுத்த கட்டமாகவே 'திவயின' பத்திரிகையின் செய்தியாளர்கள் இரகசியப் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். 'திவயின' பத்திரிகையே தனது வெளியூர்ப் பதிப்பில் 'சூரியகந்த' விவகாரம் குறித்து பெரும் தலைப்பில் செய்தியும், புகைப்படங்களும் வெளியிட்டு இருந்தது. அரசின் அழுத்தத்தால் கொழும்புப் பதிப்பில் பெரியளவில் இச்செய்தி இடம்பெறவில்லை என்பது சுட்டிக்காட்டக்கூடியதாகும். இது இவ்விவகாரம் தொடர்பாக பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கைகளும் மிரட்டலும் ஆகும்.

அதாவது சட்டத்தின் மூலம் சாதிக்கமுடியாததை அரசாங்கம் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மூலம் சாதிக்கப் பார்க்கின்றது. கடந்த காலத்தில் அவ்வாறு சாதித்தும் உள்ளது. முன்னாள் ஜனாதிபதி காலத்தில் இடம்பெற்ற றிச்சாட் டி சொய்சா போன்றவர்களின் கொலைகளும் இவ்வாறானதொன்றே. ஆகையால் ஐ. தே. க அரசாங்கம்இவ்வழியை பின்பற்றுவதற்கு பெரிதாக ஒன்றும் சிந்திக்கவேண்டி இருக்கும் என எதிர்பார்க்கத்தேவையில்லை.

இந்நிலையில் தென்னிலங்கையில் உள்ள பத்திரிகைகள் அரசாங்கத்தை அம்பலப்படுத்துவதில் முந்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஜே. வி. பி. காலத்தில் வாயடைத்துப் போனது போல் சிக்க வேண்டி நேரிடும் அதன் பலனாக பத்திரிகைகள் தமது சுதந்திரத்தை மட்டுமல்ல பலரை இழக்கவேண்டியும் வரலாம். இதேவேளை அரசை எதிர்க்க முற்பட்டாலும் பலரை இழக்கவேண்டிவரக் கூடும். ஆனால் அது அவர்கள் தமது மக்களுக்கு ஆற்றிய சேவை என எதிர் காலத்தில் போற்றப்படும்.

ஆனால் இதில் எதை பத்திரிகையாளர்கள் செய்வார்கள் என்பதை தற்பொழுது கூறிவிடமுடியாது. தமிழருக்கான நீதியைத்தான் இப்பத்திரிகைகள் ஏற்காதுவிடினும், சிங்களவருக்காகவாவது இப்பத்திரிகைகள் போராடுமா என்பதே இன்றுள்ள கேள்வி.

களும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

இதனால் தமது கடமையை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (17)

## மலேரியா தீவிரமாக பரவலாம் சுகாதார அதிகாரி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

இரத்தப்பரிசோதனைக்கான கண்ணாடிகள், பற்றாக்குறை நிலையில் இருப்பதாலும் ஆய்வு கூடம் முறையாக செயற்படாத நிலையின் காரணத்தாலும் மலேரியா நோயை இனங்காண்பதும் கட்டுப்படுத்துவதும் சிரமமானதாக இருக்கும் சூழ்நிலையில் அண்மையில் பெய்த பெரு மழையினால் நுளம்புகள் பெருகும் வாய்ப்பு அதிகரித்திருப்பதால் மலேரியா தீவிரமடையலாம் என்று அஞ்சப்படுவதாக யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டுகளில் 20.1 என்று ஆகவிருந்த நோயாளிகளின் விகிதம் இப்போது 10.1 ஆக உயர்வடைந்திருப்பதாகவும், வெள்ளம் தேக்கம் அடைந்திருப்பதும் மலத்தியோன் தெளித்தல் போன்ற நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதும் இந்நோய்மேலும் பெருக்கக்காரணமாக இருக்கலாம் என்றும் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார்.

1989ல் 20 பேரும் 1990ல் 23 பேரும் மலேரியாவின் தீவிர தாக்கத்திற்கு உட்பட்டிருந்த போதும் இத்தொகை 1991 முதல் நூற்றுக்கு மேலாக அதிகரித்திருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் பணி கடந்த வாரம் முதல் அவ்வப் பகுதி சுகாதாரவைத்திய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரால் இப்பணி பரவலாக்கப்பட்டு இருப்பதுகுறிப்பிடத்தக்கது.

## எள்ளை உடனடியாக பயிரிடக் கோரிக்கை

இலகுவாகப் பயிரிடக்கூடிய செலவு குறைந்த இலாபம் தரக்கூடிய பயிராக எள்ளு விளங்குவதால் பயிரிடாமல் தரிசாக உள்ள மேட்டுக் காணிகளில் மழைபெய்து ஓய்ந்தவுடன் உடனடியாக ஓர் உழவுடன் எள்ளினைப் பயிரிடுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வட தமிழீழத்திற்கான நல்லெண்ணெய் தேவையானது 1.5 மில்லியன் லீற்றர் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இந்தத் தேவையினை ஈடுசெய்ய 4500கெக்டரில் உற்பத்தியினை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது தற்போது இங்கு உற்பத்தி செய்யப்படும் எள்ளின் அளவு போதாமையினால் எள்ளுக்காக சிங்களப் பிரதேசங்களை நம்பியிருக்க வேண்டிய நிலையும், இதனால் எண்ணையினை எடுக்கும்கைத் தொழிலாளர்கள்பாதிப்படையும் நிலையும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

…பத்தி செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை காலை பத்து மணியளவில் ப. நோ. கூ. சங்க தலைவர், பொதுமுகாமையாளருக்கான கலந்துரையாடல் கூட்டுறவு சபைத் தலைவர் வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. அன்றைய கூட்டத்தில் உணவுப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் கூட்டுறவு சங்கங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் உட்பட பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன

### கால்நடைவளர்ப்போர் சங்கம் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி கோட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் மிருக வைத்திய திணைக்களமும் இணைந்து சுமார் 18 இடங்களில் இச் சங்கத்தின் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தாய்ச் சங்கமும் அமைக்கப் பட்டிருப்பதுடன் நெறியாளர் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### போர்க்கால கருத்தரங்கு

(வடமராட்சி)

வடமராட்சியில் கிராமரீதியில் சனசமூக நிலையங்கள் தோறும் 'போர்க்கால கருத்தரங்குகள்' தினமும் நடைபெற்று வருகிறது. இக்கருத்தரங்குகளின் போது பூநகரி சமர் வீடியோ படக்காட்சி, வீதிநாடகம், கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன. (யோ)

பார்வையாளராக பெங்களூர் வந்திருக்கும் டாக்டர் ஜகன்நாத் மிஸ்ரா கூறியுள்ளார்.

பெங்களூரில் கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி மற்றும் பதவி துறந்துள்ள துணை முதல்வர் எஸ். எம். கிருஷ்ணா உட்பட எண்பதுக்கும் அதிகமான சட்டப் பேரவை உறுப்பினர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசினார்.

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சிறுபான்மைச் சமூகத்தாரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சிந்து தேசிய முன்னணியும், பாகிஸ்தான் சராயத்தி கட்சியும் கூட்டணி அமைக்க இணக்கம் கண்டுள்ளன.

அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்து போயிருப்பதை எதிர்த்து ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் இந்த இரு கட்சிகளும் கூட்டுப் போராட்டங்களை நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காட்டுத் தீ பரவுவதால் அவுஸ்திரேலியாவில் பதற்றம்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் மிக மோசமாக காட்டுத் தீ வெகு வேகமாகப் பரவி வருவதால் அச்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட இப் பெருந்தீயினால் சிட்னி நகருக்கு சமீபமாகவுள்ள வீடுகள் பலவும் கூட தீப்பற்றிக் கொண்டுள்ளன. இத்தகையதொரு நிலையை இதற்கு முன்பு ஒருபோதும் தாம் எதிர்நோக்கவில்லையென காட்டுத் தீ தடுப்புப் பணியக இயக்குனர் கூறியுள்ளார். அவுஸ்திரேலியாவின் மிகப்பெரும் நகரங்களில் ஒன்றான சிட்னியின் மத்திய பகுதியிலிருந்து பத்து கிலோ மீற்றர் தொலைவில் தீ பரவியிருந்ததாகவும் எழுபதுக்கும் அதிகமான வீடுகளில் தீப்பற்றிக் கொண்டதாகவும் மேலும் கூறப்படுகிறது கடும் வெப்பம் இன்னும் சில தினங்களுக்கு இருக்கலாம் எனவும் கடும் காற்று வீசலாம் எனவும் கூறப்படுகின்றது.

மக்கள் அதிகமாக வாழும் நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் எண்ணூறு கிலோமீற்றருக்கும் அதிகமான தூரத்தில் பரவியிருக்கும் தீயை அணைப்பதில் ஏழாயிரத்துக்கும் அதிகமான தீயணைப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### சபாநாயகர்களின் மாநாடு

(டாக்கா)

தென்னாசிய நாடுகளின் பாராளுமன்ற சபாநாயகர்களின் மாநாடு எதிர்வரும் இருபத்தெட்டாம்திகதியன்று பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தின் போது தென்னாசிய நாடுகளுக்கான பாராளுமன்றம் ஒன்றை அமைப்பது பற்றியும் ஆலோசனை நடாத்தப்படவுள்ளது.

### தேர்தலில் பங்குபற்றாது

தென் ஆபிரிக்காவின் சூலு மக்களின் கட்சியான இன்காதா சுதந்திரக்கட்சி, எதிர்வரும் தேர்தல்களின் போது தான் பங்குபற்றப்போவது இல்லை எனக் கூறியுள்ளது இக் கட்சியின் கொள்கை திட்டமிடல் நடத்திய கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெப். கேணல் வேணு உட்பட

# நான்கு போராளிகள் நினைவாக வீரவணக்கக் கூட்டங்கள்

(மன்னார்)

கடந்த ஆண்டு ஜனவரி ஆறாம் திகதி மாதிரிக்கிராம வெடிவிபத்தில் வீரச்சாவு அடைந்த மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் வேணு, மேஜர் சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டி மணி ஆகிய நான்கு மாவீரர்களினதும் நினைவாக நானாட்டான், முருங்கன் பகுதிகளில் வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெற்றன.

நானாட்டான் கலை பண்பாட்டுக்கழக இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நானாட்டான் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திலகன் மற்றும் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர். இறுதியில உரையாற்றிய மாவட்டத் துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் நந்தகுமார் தனது உரையில் ''எமது மாவீரர்களின் கல்லறையில் நீங்கள் மண்டியிட்டு கண்ணீர் சிந்துவதாலோ மலர்வளையம் வைத்து அஞ்சலி செய்வதாலோ மாவீரர்களின் கனவை நிறைவேற்ற முடியாது. ஒவ்வொருவரும் எமது மாவீரரின் புதைகுழி மீது நின்றுகொண்டு எமது இலட்சியத்தை வென்றெடுப்போம் என்று உறுதி எடுக்கவேண்டும்'' எனக் குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் நூற்றுக் கணக்கில் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதேபோன்று மடுவட்டத்தில் அல்வின் தலைமையிலும், முழங்காவிலில் செந்தாளன் தலைமையிலும், பூநகரியில் மதன்ராஜ் தலைமையிலும், பள்ளமடுவில் கதிரவன் தலைமையிலும் அஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெற்றன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில்

## பட்டதாரி ஆசிரியர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளில நிலவும் பட்டதாரி ஆசிரியர், டிப்ளோமா ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நியமனங்களை மாகாண சபையே வழங்கவுள்ளது. விரைவில் இதுதொடர்பான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சுவாமி விவேகானந்தர் தேசியதினம்

சுவாமி விவேகானந்தர் தேசிய தினவிழா எதிர்வரும் 12ஆம திகதி புதன்கிழமை மாலை 4.00 மணிககு உரும்பராய் சுபீட்ச நூல் நிலைய மண்டபத்தில் ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம் சுவாமி சித்ரூபானந்தா விசேட சொற்பொழிவாற்றுவார். மேலும் சிறப்புரை, பண்ணிசை என்பன நடைபெறவுள்ளன.

## இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

பனைமரம் விழுந்ததில் தலையிலும் தோளிலும் படுகாயமடைந்த அற்புதராசா சற்குணம் (வயது 25) என்னும் இளைஞர் யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரும் வேறு சிலரும் சேர்ந்து அரியாலைகிழக்குப் பகுதியில் பனைமரம் ஒன்றை தறித்தார்கள். அப்போது அது இவரின் மேல் விழுந்ததாலேயே இவர் படுகாயமடைந்தார். (சி)

## கத்தோலிக்க ஆசிரியர் ஒன்றுகூடல்

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்குயாழ் மாவட்ட (வலயம் 1, 2) பாடசாலைகளில் கத்தோலிக்க சமயம் போதிக்கும் பயிலுனர், தொண்டர் உட்பட சகலருக்கும் யாழ் மறைக்கல்வி நிலையத்தில் ஒன்றுகூடலும், செயலமர்வும் நடைபெறுமென இயக்குனர் அருட்திரு சகாயநாதன் அடிகளின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## 'கல்விஏழைகள்' முதலிடம் பெற்றது

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகளிடையே அண்மையில் நடந்தேறிய ''ஆ'' பாடத்திட்ட நாடகப் போட்டியில் யாழ். குருநகர் புனித றோக் றோமன் கதலிக் வித்தியாலய மாணவர்களால் நடாத்தப்பட்ட ''கல்வி ஏழைகள்'' என்னும் நாடகம் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்றுபலரது பாராட்டுதல்களையும்பெற்றுள்ளது.

இவ்வித்தியாலய அதிபர் திரு தஸ். பாலசுந்தரத்தையும், ஆசிரியர் திரு. ஜேயோன்சனையும் யாழ். கல்வி அதிகாரிகள் வெகுவாகப் பாராட்டி உள்ளனர். (24)

தமிழர்

எவரும் இருக்க முடியாது என மேலும் அவர் தெரிவித்தார்.

வடக்குக்கிழக்கு யுத்தத்தை சாதாரண தென்பகுதிமக்கள் விரும்பவில்லை என்பதை எனது விகாரைக்கு வரும் தாய்மாரின் நேர்த்திக் கடன் மூலம் நேரடியாகவே நான் கண்டுவந்துள்ளேன்.

விகாரைக்கு வரும் அந்தத் தாய்மார்கள் தமது பிள்ளைகளுக்கு வேலை இல்லையே, அவர்களுக்கு வேலை வேண்டும் என ஆரம்பத்தில் நேர்த்திக் கடன் வைக்கிறார்கள். அதேதாய்மார்கள் சிலகாலத்திற்குப் பின்னர் விகாரைக்கு வரும்போது தமது பிள்ளைகளுக்கு உயிர்ப் பாதுகாப்பு வேண்டும் என வேண்டி நேர்த்திக்கடன் வைக்கிறார்கள். அதாவது வேலை இல்லாத அவர்களது பிள்ளைகளுக்கு இப்போது இராணுவத்தில் வேலை கிடைத்து விட்டது.

வேலை வாய்ப்பு இல்லாதபடியால் இவ்வாறு இராணுவத்தில் சேரும் சாதாரண வறிய சிங்கள இளைஞர்களே யுத்தத்தில் மடிகின்றனர் என மேலும் அவர் கூறினார்.

ஏழாவது

சேர்ந்தவர்களான எட்வேட் அன்ரன் உதயகுமார் (வயது 23), திருச்செல்வம் செபஸ்ரி அமலராஜ் (வயது21) இருவரது சடலங்களும் இன்னமும் கரைஒதுங்கவில்லை (யோ)

நான்தான்

யாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் விசேடமாக எதையுமே நமது மக்களுக்குக். கேட்கவில்லை. இந்த நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமைகளையே நாம் கேட்கிறோம் தோட்டத் தொழிலாளர்களின் கல்வி, காணி, குடியிருப்பு போன்ற உரிமைகளையே கேட்கிறோம்.

# இரு முன்னாள் அமைச்சர்கள் அ. தி. மு. கவில் இருந்து நீக்கம்

கட்சிவிரோத நடவடிக்கை காரணமாம்

(சென்னை)

அ. தி. மு. க முன்னாள் அமைச்சர்களும் தற்போதைய சட்டப்பேரவை உறுப்பினர்களுமான அழகு திருநாவுக்கரசும் ஜி. விஸ்வநாதனும் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து கட்சித்தலைவர் ஜெயலலிதாவினால் அறிக்கை ஒன்றும் வீடப்பட்டுள்ளது. இருவரும் கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழகு திருநாவுக்கரசும், விஸ்வநாதனும் நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற செய்தியாளர்மாநாடு ஒன்றில் கட்சி ஸ்தாபகரான எம். ஜி. ஆரின் கொள்கைகளில் தற்போதைய கட்சித் தலைமை தோல்வியடைந்திருப்பதாக கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சந்தனக்கடத்தல் வீரப்பனை விரைவில் பிடிக்கலாமாம்

(சென்னை)

சந்தனக்கடத்தல்காரன் வீரப்பன் தற்போது பொலிசாருக்கு அஞ்சி காடுகளில் ஓடிக்கொண்டிருப்பதாகவும் எந்த நேரத்திலும் வீரப்பன் கைதாகலாம் என்றும் தமிழ்நாடு பொலிஸ் உயரதிகாரி டபிள்யூ. ஐ. தேவாரம் தெரிவித்துள்ளார்.

வீரப்பனை பிடிக்க எட்டு மாதங்களாக அதிரடிப்படையினர் தீவிரமாக முயற்சிப்பதாகவும் அத்தியாவசியப் பொருள்கள் வீரப்பனுக்கு கிடைக்கும் வழிகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் வீரப்பனின் சகாக்கள் 48 பேரின் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தேவாரம் மேலும் தெரிவித்தார்.

வீரப்பன்குழுவில் தற்போது 14பேர் மட்டுமே எஞ்சியுள்ளதாகவும் 150க்கும் மேற்பட்டோர் கைதாகி விட்டதாகவும் குறிப்பிட்ட அவர் வீரப்பன் குழுவினால் காடுகளில் வைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

ஆர். எஸ். எஸ். அலுவலக குண்டுவெடிப்பு

## சந்தேகநபரின் சகாக்கள் கோயம்புத்தூரில் கைது

(சென்னை)

சென்னையில் ஆர். எஸ். எஸ் தலைமையலுவலக குண்டுவெடிப்பு தொடர்பாக தேடப்பட்டுவந்த ஒருவரின் இரு நெருங்கிய சகாக்கள் நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் கைது செய்யப்பட்டனர் எனவும் இவர்களிடமிருந்து வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்,

இவர்களில் ஒருவர் காஷ்மீர் தீவிரவாதிகளிடம் வெடிமருந்து பயன்பாடு குறித்து பயிற்சி பெற்றவர் என்றும் மற்றையவர் மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபடுபவர் என்றும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

புதைகுழி

யைத் தோற்றுவித்துள்ளது.

இந்தவிடத்தில் மாத்திரம் தான் மனிதப் புதைகுழிகள் இருக்கும் என்பதை இன்று மக்கள் நம்பத் தயாராக இல்லை. இன்னும் பல புதைகுழிகள் எதிர்காலத்தில் கண்டுபிடிக்கப்படலாம் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இவ்வாறு மேலும் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுமானால் அரசாங்கத்தின் நிலை கேள்விக்குரியதாகிவிடும் மேலும் எம்பிலிப்பிட்டிய புதைகுழியில் மாணவர்களின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் அரசாங்கம் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும்.

எம்பிலிப்பிட்டியவில் காணாமல்போன மாணவர்கள் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களை அரசாங்கம் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது. இதில் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் குற்றவாளிஎன கமிசன் தீர்ப்பளித்த பின்னரும் அவர் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என மேலும் அவர் தெரிவித்தார்.


## தவறிவிட்டது

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும் மானிப்பாய்தினேஷ் பாணகத்திற்கும் இடையில் அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், மூக்குக் கண்ணாடி, புதிய டயறி வேறு சில முக்கியமான ஆவணங்கள் கைப்பையுடன்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் திணேஷ் பாணகத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

க. சி. தில்லையம்பதி
(7181) அருணா பேக்கறி, நாவற்குழி.

ஈழநாதம்

# 4-ம் ஆண்டு நிறைவு

## போட்டிகளும், விதிமுறைகளும்

ஈழநாதம் மக்கள் தினசரி நான்காவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக சிறுகதைப்போட்டி, கவிதைப்போட்டி என்பவற்றை நடாத்த முன்வந்துள்ளது. இப்போட்டிகளில் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளடக்கங்கள் விரும்பி வரவேற்கப்படும்.

சிறுகதை கவிதை

போட்டிகளில் கலந்துகொள்வோர் கடைப்பிடிக்கவேண்டியவை


## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி ஏரம்பு

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி ஏரம்பு புங்குடுதீவில் காலமானார். அன்


## காணவில்லை

கட்டுடையைச் சேர்ந்த

### கணபதி தெய்வி (அப்பாச்சி)

7-1-94 லிருந்து காணவில்லை. உயரம் 5' 6''. நிறம்: வெள்ளை, வயது: 82, கக்கரிப்பு சேலையும்

- படைப்புகள் யாவும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் வண்ணம் அமைதல்வேண்டும்.
- படைப்புகள யாவும் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுததில் அலலது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும.
- சிறுகதைகள சுமார் 1500 சொற்களுக்கு மேற்படா திருத்தல் வேண்டும்.
- கவிதைகள 30 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- படைபபாளரின் பெயர், முகவரி என்பன தனித்தாளில எழுதப்படவேண்டும என்பதுடன் படைப்பாளர்கள் தமது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.
- ஆக்கங்கள் இதற்குமுன் பிரசுரமானதாகவோ, வேறெங்கும் பிரசுரம் செய்வதற்காககையளிக்கப்பட்டவைகளாகவோ இருத்தல் கூடாது.
- போட்டிக்கான ஆக்கங்கள் அனைத்தும் ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் 'ஈழநாதம்' அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும். பிந்திக்கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது.

போட்டி முடிவுகள் யாவும் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

இப்போட்டிகளில் முதலாவது பரிசுபெறும் ஆக்கங்கள் நான்காவது ஆண்டு நிறைவு விழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தகுதியானவை எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஆக்கங்கள் ஈழநாதம் இதழ்களில் பிரசுரமாகும்.

முதல் மூன்று இடங்களையும் பெறும் ஆக்கங்களுக்கு நான்காவது ஆண்டு நிறைவுநாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஆக்கங்கள் அனைத்தும் ''ஈழநாதம் ஆண்டு நிறைவுப்போட்டி' என கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட்டு

ஆசிரியர்,
**ஈழநாதம்**
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது**

மகேஸ்வரி ஏரம்பு புங்குடுதீவில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற தலைமை ஆசிரியர் கதிரித்தம்பி ஏரம்பு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தலைமை ஆசிரியர் நல்லதம்பி வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி யோகாம்பிகையின் அன்பு மருமகளும் ஜெகதீஸ்வரன் (இளைப்பாறிய உணவுக்கட்டுப்பாடடுப் பரிசோதகர்), தியாகராசா (ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி), சண்முகானந்தராசா (பிரான்ஸ்), கணேசானந்தராசா (லிகிதர் வலிகாமம் வடக்கு பிரதேசசபை), முருகானந்தராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்னேஸ்வரி (இளைபபாறிய ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி), யோகேஸ்வரி, இராஜேஸ்வரி (பிரான்ஸ்), இராஜேஸ்வரி ஆகியோரின அன்பு மாமியாரும் கோகிலா, வரதன், உத்தமன், யசோதா, உருத்திரன், நடனசபேசன், சுரேஸ், பாலாஜி, மயூரன், பிருந்தா, நித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அ ந. தம்பிராசா (இளைப்பாறிய லிகிதர்), அ. ந. தாமோதரம் பிள்ளை (லிகிதர் மலேசியா), காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, இராசம்மா மற்றும் அ. ந. பசுபதிப் பிள்ளை (இளைப்பாறிய அதிபர்), வித்துவான் கனகசபை, கறபகம், காவேரி காலஞ்சென்ற தங்கரெத்தினம், நவநீதம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நல்லதம்பி (ஆசிரியர்), தர்மலிங்கம், அம்பலவாணர் (கனடா), பராசக்தி காலஞ்சென்ற முத்துக்குமாரு ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் புங்குடுதீவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

18/4 B. A. தம்பி லேன்
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (7179)

தகவல்:
ஏ. ஜெகதீஸ்வரனும்,
சகோதரர்களும்

## திரு. பிலிப் பீற்றர்

திருக்கோணமலை கும்புறுப்பிட்டியை பிறப்பிடமாகவும் தற்போது சங்கானையை வசிப்பிடமாகக் கொண்ட திரு. பிலிப் பீற்றர் 08-01-94 இல் காலமானார். இவர் முன்னைநாள் கடற்படைப் பிரிவைச் (திருக்கோணமலை) சேர்ந்தவரும் கும்புறுப்பிட்டி சமாதானக் குழுத் தலைவரும், அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவருமாவார். இவர் சுபத்திராவின அன்புக் கணவரும், அன்ரன் (ஜேர்மன் ஒலிபரப்பு நிலையம், திருமலை), விக்டர், சந்திரா, கிறேஸ், அனுரா, பிறேமா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோச், யோன்சன் (பிரான்ஸ்), விக்டர், சொர்ணராஜா, சவுந்தரராஜன் (சங்கானை விநாயகர் ஸ்ரோஸ்), றீற்றா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-1-94) காலை 10 மணிக்கு சங்கானை சலேசியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

அராலி றோட்,
சங்கானை. (7180)

தகவல்; பீ. அன்ரன்
(மகன்)

களையே கேட்கிறோம். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடனும் முன்னாள் பிரதமரும் இந்நாள் ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்கவுடனும் 1991ஆம் ஆண்டில் இவை தொடர்பாக என்னுடன் ஏற்பட்ட இணக்கப்போக்கை இன்றைய ஜனாதிபதி உதாசீனம் செய்கிறார். அவரோடு நான் இரண்டு மாதங்களுக்குமுன் பேசிய பொழுது அவர் மிகவும் ஆத்திரமுற்ற நிலையில் நான் தான் ஜனாதிபதி எனக் கூறினார்.

50, 000க்கு மேற்பட்ட இளைஞர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டபோதும் என்னால் ஒருவரைக்கூட விடுதலை செய்யமுடியவில்லை. இந்த நிலையில் நாம் அரசுடன் இருப்பதனால் என்னபலன்? இருக்கவும் வேண்டுமா?

அரசுடன் நாம் சமாதானம் பேசும் அதே வேளையில் நமது சக்தியின் நிலையை அரசுக்கு காட்டவே மத்திய மாகாணசபையில் காமினி திஸநாயக்காவை முதலமைச்சராக்க ஆதரவு வழங்கக் கருதினோம். இதன் காரணமாக மத்திய மாகாணசபை முதல் அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக அத்தீர்மானத்திற்கு ஆதரவாகச் செயல்படுமாறு முடிவெடுத்தோம். ஆனால் இந்த முடிவிற்கு எதிராக 7பேர் எம்மைக் காட்டிக்கொடுத்துவிட்டார்கள். அவர்கள் எழுவரும் உடனடியாக ராஜினாமாச் செய்யவேண்டும். இவர்களை எதிர்த்து நாம் நீதிமன்றம் போகத்தேவையிலலை. மக்கள் சக்தியால் இவர்களுக்கு நன்கு பாடம் புகட்டப்படும். இவ்வாறு நம்பிக்கைக்கு எதிராக நடந்தவர்களைத் துரோகிகள் எனக் கூறாமல் வேறு என்னதான் சொல்ல இயலும்? என்றார்.

...காணவில்லை. உயரம்: 5' 6''. நிறம்: வெள்ளை, வயது: 82, கத்தரிப்பூ சேலையும் வெள்ளை மேற்சட்டையும் அணிந்திருந்தார். இவர் பற்றிய தகவல் தெரிந்தோர் தயவுசெய்து கட்டுடை, மேஜர் சுபாஸ் ச. ச. நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(7178)

தகவல்:
க. புவனேஸ்வரன் (தவம்)


## தேவை

**எல்லா அளவுகளிலும் 'லமினேற்'**
**(*Laminate*) செய்யும் மெசின்**
தேவைப்படுகிறது. உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

(7177)

**கிளீன்கட்.**
யாழ்ப்பாணம்.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 07-01-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 127

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்
42-6226

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்
26-1084, 40-4760, 24-5177, 42-6974, 42-3726, 24-9938.

### 08-01-94

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 139

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
24-9390, 26-2070, 40-2573, 28-1686, 26-3130, 26-4648, 26-1098, 24-6944, 27-3903, 42-9245, 28-1049, 24-4108. 27-9649, 22 9193, 24-5119, 26-2764, 24-8353, 42-962, 22-3887, 27-9830 41-976, 26-1376, 26-3177, 24-878, 28-8353.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்.
26-502, 26-2317, 26-7068, 27-6762, 22-7862, 41-9997, 26-4874, 41-7693, 42-3419, 26-4376, 41-5015, 42-3514, 27-9825, 41-9579, 26-6526, 22-7271, 27-9779, 24-5258, 27-2761, 27-8155, 26-4896, 26-3638, 24-4481, 26-4450, 27-4024, 27-8754.